Mrs. A. Satkunna

# யா/விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்

## J / VICTORIA COLLEGE
CHULIPURAM

# பழைய மாணவர் சங்கம்
# Old Students Association

## வருடாந்தப் பொதுக் கூட்டம்
## ANNUAL GENERAL MEETING

**27-04-1997** ஞாயிறு

காலை 9-30 மணி (இலங்கை நேரம்)

# ஆண்டறிக்கை

07-05-1995 – 27-04-1997

# யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

## பழைய மாணவர் சங்க

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

---

**காலம்:- 27-4-97 ஞாயிறு காலை 9-30 மணி**

**தலைவர்:- திரு வே. நாகராஜா B. Sc.**

*(ஓய்வு பெற்ற அதிபர்)*

## ★ *நிகழ்ச்சி நிரல்* ★

1. இறைவணக்கம்.
2. மெளன அஞ்சலி
3. தலைவர் உரை
4. செயலாளர் அறிக்கையும், செயற்பாட்டு அறிக்கை
5. பொருளாளர் அறிக்கை
6. பிரதம விருந்தினர் உரை

   ***திரு கா சந்திரராசா அவர்கள்***

   (பிரதேச செயலர் – வலி மேற்கு)
7. அதிபர் உரை ***திரு கா. சந்திரபாலன்***
8. சபையோர் குறிப்புரை
9. புதுவருட உத்தியோகத்தர் தெரிவு
10. நன்றி உரை
11. இறைவணக்கம்

***அன்புடன் அழைக்கின்றோம்***

**ந. சிவரஞ்சன்**

*கௌரவ செயலாளர்*

# நடப்பாண்டு நிர்வாகசபை

| | |
|---|---|
| தலைவர் | திரு வே. நாகராஜா |
| துணைத் தலைவர்கள் | திரு K. சந்திரபாலன் |
| | திரு N. விவேகானந்தன் |
| செயலாளர் | திரு ந. சிவறஞ்சன் |
| உப செயலாளர் | திரு நா. சண்முகநாதன் |
| பொருளாளர் | திரு மு. நடராசா |
| உறுப்பினர்கள் | திரு K. சிறீதரன் |
| | திரு தி. உதயசூரியன் |
| | திரு S. தியாகலிங்கம் |
| | திரு ப. இராசகுரு |
| | திரு P. துரைசிங்கம் |
| | திரு S. அழகரத்தினம் |
| | அமரர் மு. குமாரவேலு |
| | திருமதி சி. புனிதவதி |
| | திருமதி அ. சற்குணசிங்கம் |

# விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

## பழைய மாணவர் சங்கம்

# செயலாளர் ஆண்டறிக்கை

18-10-1992 இல் புனரமைப்புச் செய்யப்பட்ட இச்சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் பல நற்காரியங்களை செய்துவரும் இவ் வேளையில் தொடர்ச்சியாக செயலாளராகப் பணியாற்றிவரும் நான் இவ்வாண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

07-05-1995 இல் நடைபெற்ற கடந்த பொதுக்கூட்டத்திற் குப் பின்னர் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் இப்பொதுக் கூட்டம் மிகவும் காலந்தாழ்த்திக் கூட்டப்படுவதையிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன். எமது சக்திக்கு அப்பாற்பட்ட நாட்டுச் சூழ்நிலையே இக்கால தாமதத்திற்குரிய முக்கிய காரணமாகும்.

இக் காலப் பகுதியில் சங்கத்தின் செயற்பாடுகளுக்காக பன் னிரண்டு நிர்வாகசபைக் கூட்டங்களைக் கூட்டியுள்ளோம் 01-10-95 இல் கடைசியாக நிர்வாக சபைக்கூட்டத்தை நடாத்தக் கூடியதாக இருந்தது. அதற்குப்பின் யாவராலும் அறியப்பட்ட பாரிய இடம் பெயர்வு காரணமாக செயற்பாடுகள் குன்றியிருந்தன. ஆண்டவன் கிருபையால் மீண்டும் எமது சொந்த இடங்களுக்கு சித்திரை 96 ற்குப் பின் வர முடிந்தது 16-06-96 இல் மீண்டும் நிர்வாக சபைக் கூட் டத்தை கூட்டி செயற்பட்டு வருகின்றோம். ஏறத்தாழ எட்டு மாதங் கள் செயற்குழுக் கூட்டங்களைக் கூட்டிச் செயலாற்ற முடியாத துர்ப் பாக்கிய நிலை ஏற்பட்டது. இது எமது சங்க வளர்ச்சியில் குந்தகம் ஏற்படுத்தியது என்று கூறலாம்.

இருந்தும் போர்க்கால சூழ்நிலையினால் எமது இடம் பெயர் வின்போது களவுபோன கல்லூரியின் பொருட்களை ஈடுசெய்ய இச் சங்கமும் தன்னாலான உதவிகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளது. கல்லூரிக்கு இடம் பெயர்வின் போது ஏற்பட்ட பொருள் நட்டம் ஏறத்தாழ ரூ 550000/- ஆகும்.

வருடந்தோறும் இடம் பெறும் கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கு இச்சங்கம் கணிசமான தொகையை வழங்கி வருகிறது. (1995ம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு ரூ 18600/- வழங்கியது) இதில் ரூ 7300/-ஐ நிர்வாக சபை உறுப் பினர்கள் தாமாக முன்வந்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது

1995ம் ஆண்டு க. பொ. த(உ/த) வகுப்பு மாணவர்களின் கணித பாடத்தினை தரம் உயர்த்தும் நோக்குடன் பிரத்தியேக ஆசிரியர் ஒருவர் மூலமாக விசேட வகுப்புக்கள் நடாத்தியமைக்காக இச் சங்கம் மாதம் ரூ 260/- வீதம் வழங்கியது.

01-10-1995 இல் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவிற்கு இச் சங்கம் ரூ 1000/- செலவு செய்து விழாவை சிறப்புற நடாத்த உதவியது.

இக் கல்லூரியில் சிறுபணியாளராகக் கடமையாற்றிய திரு சி. பூதப்பிள்ளை அவர்களும், அவரது பாரியாரும் 11-07-1995ம் திகதி இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சில் பலியானதையிட்டு அவரது இருபிள்ளைகளுக்கும் வங்கியில் ரூ 3000/- நிரந்தர வைப்பி லிடப்பட்டுள்ளது. இவ்விரு பிள்ளைகளும் இக்கல்லூரியின் மாணவி களேயாகும்.

இக்கல்லூரி மண்டபத்தில் திருமுறை முற்றோதல் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது இதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், இச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் நல்ல பலனும் அடைந்துள்ளனர்.

மேலும் கீழ்க்காணும் விடயங்களுக்கு இச்சங்கம் மாதாமாதம் கொடுப்பனவுகளை வழங்கி வருகிறது.

1) விஞ்ஞான ஆசிரியர்கள் (இருவர்)
2) நடன ஆசிரியர் (ஒருவர்)
3) அளவையியல் ஆசிரியர் (ஒருவர்)
4) நூலகர் (ஒருவர்)

இக்காலப் பகுதியில் இக் கொடுப்பனவுகளுக்காக ரூ 25050/- மொத்த மாக வழங்கப்பட்டுள்ளது

அண்மையில் உப வலய மட்டத்தில் நடந்த உடற்பயிற்சி போட்டியில் இக் கல்லூரி மாணவ, மாணவியர்களும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பங்குபற்றினர். இதற்கான போக்குவரத்துச் செலவான ரூ 3000/- ஐ இச்சங்கம் வழங்கியது.

மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளை தரிக்கவைக்க தரிப் பிடமொன்றினை அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளோம்.

கல்லூரியில் பல திருத்த வேலைகள் உள்ளதை எம்மால் உணரமுடிகிறது இத்தருணத்தில் செய்யாவிடின் வேலைப்பளுவும் செலவும் அதிகரிக்கும் என்றும் எம்மால் உணர முடிகிறது விசேட மாக பிரதான மண்டபம், பெரிய கிணறு, தண்ணீர் தாங்கி போன்ற வற்றைக் குறிப்பிடலாம். லண்டன் கிளையுடன் ஏற்கனவே பிரதான மண்டப திருத்த வேலைகளை பொறுப் பேற்றுச் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளோம்

இவற்றைவிட அவ்வப்போது அதிபருடன் கலந்தாலோசித்து எம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றோம். இக்காலகட்டத்தில் தற்சமயம் சேவையாற்றிக் கொண்டிருக்கும் அதிபரான உயர் திரு ா சந்திரபாலன் அவர்களின் சேவை அதி உன்னதமானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

பிரான்ஸ் கிளையிலிருந்தும், கனடா கிளையிலிருந்தும் நிதி உதவி கிடைத்துள்ளது. இந் நிதி உதவிகள் வங்கியில் இடப்பட்டு உரியமுறையில் பரிபாலிக்கப் படுகின்றன. இந் நிதிகளின் வட்டிப் பணங்களையே சங்கம் அவ்வப்போது உபயோகித்து வருகின்றது. பிரான்ஸ், கனடா கிளைகளைப் போன்று ஏனைய கிளைகளும் நிதி உதவி செய்வார்களென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நிர்வாகக் குழுவினர் எமக்குப் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். விசேடமாக புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் விடயத்திலும் உள்ளூர்களில் நிதி சேகரிக்கும் விடயத்திலும் முக்கிய பங்காற்றியுள்ளனர். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச் சங்கத்தின் நி ச உறுப்பினர் திரு மு குமாரவேல் ஆசிரியர் அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு (21 02-97) அன்னாருக்கு சங்கம் கண்ணீர் அஞ்சலி ஒன்றினை பத்திரிகையில் பிரசுரித்து சங்கம் அனுஷ்டித்தது அத்துடன் இக்கல்லூரியின் வளர்ச்சியில் நீண்டகாலம் சேவையாற்றிய கீழ்காணும் அதிபர், ஆசிரியர்களுக்கு சங்கம் தனது அனுதாபத்தைத் தெரிவித்தது.

1) திரு A. M. ஸ்பென்சர் — அதிபர்
2) திரு M J கந்தையா — ஆசிரியர்
3) திரு K. கந்தையா — பிரதி அதிபர்
4) திரு T. நடராசா — ஆசிரியர்
5) திரு கந்தசாமி — ஆசிரியர்
6) திருமதி கே விஸ்வலிங்கம் — ஆசிரியர்
7) திரு வை ரவீந்திரன் — ஆசிரியர்
8) திரு ஆசீர்வாதம் — ஆசிரியர்

இக் கல்லூரியின் நீண்ட கால ஆசிரியையான திருமதி பொன் பாக்கியம் அவர்கள் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றதையடுத்து கல்லூரியினால் வழங்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் இச் சங்கமும் பங்குபற்றி சிறப்பித்தது.

எமது நிர்வாக காலப்பகுதியில் எம்மால் செய்து முடிக்காமல் உள்ள பல வேலைத்திட்டங்கள் உள்ளன அவற்றை புதிய நிர்வாகம் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதியாக இச்சங்கம் தனது முழு அளவிலான பங்களிப்பை கல்லூரியின் வளர்ச்சியில் காட்ட வேண்டுமெனவும் இக் கல்லூரி இம் மாவட்டத்திலேயே பெரிதும் வளர்ச்சியடைந்த கல்லூரியாகத் திகழ வேண்டு மெனவும் இறைவனை வேண்டி இவ்வறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

ந சிவநேசன்
கௌரவ செயலாளர்

## இச் சங்கத்தின் கிளை நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

1) கொழும்புக் கிளை:-
தலைவர்:- திரு K அருணாசலம் அவர்கள்
செயலாளர்:- திரு அ. ஞானமோகன் அவர்கள்
தனாதிகாரி:- திரு S. சிவராம் அவர்கள்

2) கனடாக் கிளை:-
தலைவர்:- திரு R. பாலசுப்பிரமணியம் அவர்கள்
செயலாளர்:- திரு K. சிவஅருள்ராஜா அவர்கள்
பொருளாளர்:- திரு V பாலச்சந்திரன் அவர்கள்
ஆலோசகர்:- திரு க. சிவசுப்பிரமணியம் அவர்கள்

3) பிரான்ஸ் கிளை -
தலைவர்:- திரு N. யோகரட்ணம் அவர்கள்
செயலாளர்:- திரு S அருள்மொழித்தேவன் அவர்கள்
பொருளாளர்:- திரு T. மகேந்திரன்
காப்பாளர்:- திரு S வரதராஜா, திரு R. சந்தசாமி

4) இலண்டன் கிளை:-
தலைவர்:- Dr R. சுப்பிரமணியம் அவர்கள்
செயலாளர்:- திரு T அருள்நாயகம் அவர்கள்
பொருளாளர்:- திரு K நடராஜா

| செய்யப்படவேண்டிய திட்டங்கள் | உத்தேச மதிப்பீடு |
| --- | --- |
| 1) பிரார்த்தனை மண்டபம் (89'×40') கூரைவேலை | ரூ 250000/- |
| 2) பிரார்த்தனை மண்டபத்துடன் இணைந்த வகுப்பறைகள் (64'×47') கூரைவேலை | ரூ 350000/- |
| 3) மலசல கூடம் (ஆண்) கூரைவேலை (37'×16') | ரூ 75000/- |
| 4) மலசல கூடம் (பெண்) (37'×16') கூரைவேலை | ரூ 75000/- |
| 5) புதிய கட்டிட திருத்தவேலை | ரூ 125000/- |
| 6) வேலைத் தளம் (மண்வேலை, மரவேலை) | ரூ 50000/- |

## பழைய மாணவர் சங்கம்
## யா / விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
# உறுப்புரிமை அன்பளிப்புச் செய்தோர் விபரம்

10-05-95 தொடக்கம் 20-04-97 வரை

| | |
|---|---|
| பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளை | 161788 — |
| பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளை | 132692 32 |
| வே. செல்வநாயகம் வட்டுக்கோட்டை | 100 — |
| க. பாலச்சந்திரன் தொல்புரம் கிழக்கு | 1000 — |
| சி. சூரியகலா தொல்புரம் மேற்கு | 750 — |
| சி. இராஜசிவம் கண்டாமை தொல்புரம் | 500 — |
| பெ. கனகரத்தினம் பண்ணாகம் | 200 - |
| செல்வி திருவேணி சுப்பிரமணியம் தொல்புரம் | 1000 — |
| தி. உதயசூரியன் தொல்புரம் கிழக்கு | 300 — |
|ச. அழகரத்தினம் பணிப்புலம் | 1000 — |
| க. பாலச்சந்திரன் பறாளாய், சுழிபுரம் | 2000 — |
| ஆ. வேலாயுதம் தொல்புரம் மேற்கு | 500 — |
| திருமதி கு. விஜிதா தொல்புரம் மேற்கு | 1000 — |
| கு. வி. கந்தசாமி பணிப்புலம் | 1000 — |
| க. சண்முகநாதன் மூளாய் மேற்கு | 200 — |
| மு. குமாரவேல் மூளாய் தெற்கு | 500 — |
| க. சண்முகநாதன் மூளாய் மேற்கு | 200 — |
| மு. நடராசா சுழிபுரம் கிழக்கு | 10'0 — |
| கி. சிறீதரன் சுழிபுரம் கிழக்கு | 250 — |
| செல்வி ஜெயந்தி சோமசேகரம் சுழிபுரம் கிழக்கு | 500 — |
| திருமதி மகேந்திரம் பூமணி சுழிபுரம் கிழக்கு | 250 — |
| வை. ஜீவநாதசர்மா மடத்தடிபிள்ளையார் கோவிலடி தொல்புரம் | 250 — |
| இ. வரதராசா குடியிருப்பு, சுழிபுரம் | 300 — |
| வே. நாகராசா சுழிபுரம் | 1000 — |
| த. சிவரஞ்சன் சுழிபுரம் கிழக்கு | 2000 — |
| சு. தியாகலிங்கம் தொல்புரம் கிழக்கு | 500 — |
| க. பாலகிருஷ்ணன் தொல்புரம் | 500 — |
| க. வேலுப்பிள்ளை தொல்புரம் | 260 — |
| கி. பூபாலசிங்கம் பறாளாய், சுழிபுரம் | 250 — |
|ச. இராமலிங்கபிள்ளை தொல்புரம் | 500 — |
| Dr B கைலாயநாதன் சுழிபுரம் | 1000 — |
| மா. பொன்னுச்சாமி சுழிபுரம் கிழக்கு | 25000 — |

| | | |
|---|---|---|
| திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் சுழிபுரம் வடக்கு | | 2000 — |
| திருமதி ஜெ. திலகவதி சுழிபுரம் கிழக்கு | | 250 — |
| நா. சண்முகநாதன் பத்திரகாளி கோயி. சுழிபுரம் கிழ | | 500 — |
| சோ. க வேலாயுதர் பண்ணாகம் | | 50 — |
| கிருஷ்ணர் நவரத்தினம் சுழிபுரம் கிழக்கு | | 1000 — |
| செ. சிறிகுமார் காளிகோவிலடி சுழிபுரம் | | 1000 — |
| பண்டிதர் ப. இராசகுரு பண்ணாகம் | | 250 — |
| திரு ஏரம்பமூர்த்தி | ஓமான் | 3125 — |
| வே. கேசவன் | ,, | 1875 — |
| திருமதி நளாயினி தயாபரன் | ,, | 2500 — |
| திரு சிவசங்கர் | ,, | 625 — |
| க. சிவசுப்பிரமணியம் கனடா | | 20000 — |
| மு. இரத்தினராசா கனடா | | 1500 — |
| திரு நாகமணி கனடா | | 1000 — |
| திருமுறை ஓதும் சபையால் திருப்பி ஒப்படைத்த பணம் | | 3000 — |
| சி. சுப்பிரமணியம் சுழிபுரம் மேற்கு (நோர்வே) | | 1000 — |
| மொத்தம் | | 377965 32 |

**யா / சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்**

# வரவு செலவு சுருக்க அறிக்கை

## 10-05-95 தொடக்கம் 27-04-97 வரை

| வரவுகள் | | செலவுகள் | |
|---|---|---|---|
| 10-5-95 மீதிகள் | | ஆசிரியர் சம்பளம் | 18150 — |
| நிலையான வைப்பு | 175000 — | உடற்பயிற்சி ஆசிரியர் | 4000 — |
| வட்டி | 3200 — | நூலகப் பொறுப்பாளர் | 2950 — |
| மக்கள் வங்கி சங்கானை | 246 62 | பரிசளிப்பு | 18600 — |
| இலங்கை வங்கி காங்கேசன் | | கணிதவளம் | 6720 — |
| துறை | 11825 35 | விளையாட்டுப் போட்டி பிரயாண பஸ் | |
| கையிருப்பு | 1615 50 | கட்டணம் | 3000 — |
| | 191887 47 | அஞ்சலி - ஆசிரியர்கட்டு | 720 — |
| | | சென்றவருட வருடாந்த அறிக்கை | 1312 — |
| அன்பளிப்பு | 83485 — | வருடாந்த கூட்டநாள் சிற்றுண்டி | 508 — |
| கவடா கிளை | 132692 32 | கல்லூரி திருமுறை ஓதல் | 2862 — |
| பிரான்ஸ் கிளை | 161788 — | வெளிநாட்டுக் கடிதங்கள் | 1322 50 |
| வரவு (நானாவிதம்) | 140 50 | ஆசிரியர் தின விழா | 688 — |
| | | தேநீர் விருந்து நிர்வாகசபை உறுப்பி | |
| | | னர்கள், ஆசிரியர்கள் | 885 — |
| | | குண்டு வீச்சினால் இறந்த கல்லூரி ஊழி | |
| | | யர் திரு பூதப்பிள்ளையின் இரு பிள்ளை | |
| | | கட்கும் சேமிப்பில் இட்டது | 3000 — |

| | | |
|---|---|---|
| கல்லூரிக் கட்டிடம் திருத்தல் | | 2718 — |
| கடிதத்தலைப்பு | | 200 — |
| பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியத்திற்கு செலுத்திய அனுமதிக் கட்டணம் | | 100 — |
| நானாவிதம் (முத்திரை, கடதாசி) | | 28 — |
| | | 67763 50 |
| நிலையான வைப்பு | 430000 — | |
| வட்டி | 3200 — | |
| சேமிப்பு சங்கானை இ. வ. | 9428 05 | |
| இலங்கை வங்கி காங்கேசன் துறை | 56405 17 | |
| கையிருப்பு | 3196 57 | 502229 79 |
| | | 569993 29 |

569993 29

வே. நாகராஜா
தலைவர்

நா. சண்முகநாதன்
உப செயலாளர்

மு. நடராசா
பொருளாளர்

யா / சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 10-5-95 முதலான கணக்குகளை எண்பார்வை செய்தேன் தரப்பட்ட ஆவணங்களின் படியும் பொருளாளரால் கூறப்பட்ட தகவல்களின் படியும் எல்லா கொடுக்கல் வாங்கல்களும் சரியான முறையில் உள்ளன என்பதை உறுதிப் படுத்துகின்றேன்.

K. நடராஜா
எண்பார்வையாளர்

20-04-97